RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# அறம் தவறாத தமிழர் பண்பாடு

**சு. தங்க ப்ரீத்தா மலர் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, பயோனியர் குமாரசுவாமி கல்லூரி, நாகர்கோவில்-629003, இந்தியா

# Ethical Values in Tamil Culture: A Sangam Literary Perspective

**S. Thanga Preetha Malar [a, *]**

[a] Department of Tamil, Pioneer Kumaraswamy College, Nagercoil - 629003, India

* Corresponding Author:

**ABSTRACT**

Sangam literature represents one of the oldest and most distinguished literary traditions in the world, offering invaluable insights into the social, cultural, and ethical life of the ancient Tamils. The experiences and values of Sangam society are broadly classified into the two literary domains of akam (interior life) and puram (public life). Rather than merely portraying human life as it is, these literary works prescribe ideals of righteous living, guiding individuals toward a disciplined, virtuous, and harmonious way of life. Their enduring significance lies in presenting profound philosophical and moral concepts in a simple, elegant, and accessible manner. Sangam literature serves as both the cradle of noble thought and the repository of Tamil cultural heritage. The ethical principles embedded in these texts reflect the progressive stages of social and cultural development among the ancient Tamils. Among these virtues, hospitality (virundhombal) occupies a place of exceptional importance, symbolizing generosity, compassion, respect for guests, and communal harmony. Hospitality is portrayed not merely as a social custom but as a moral obligation that strengthens interpersonal relationships and upholds the dignity of society. This article examines the ethical foundations of Tamil culture as reflected in Sangam literature, with particular emphasis on the virtue of hospitality. By analyzing literary evidence, the study highlights how this timeless ethical principle embodies the cultural identity of the ancient Tamils and continues to offer valuable guidance for fostering compassion, social responsibility, and harmonious coexistence in contemporary society.

**Keywords:** Tamil Culture, Akam, Puram, Hospitality.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் காலத்தால் மிகப் பழமையானது. சங்ககால மக்களின் வாழ்வியல் முறைகளை அகம், புறம் எனும் இரு பிரிவுகளில் அடக்குவர். மக்கள் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் எனும் நிலையை மாற்றி, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்வின் அடிநாதத்தை எடுத்துக் கூறியவை நம்முடைய இலக்கியங்கள் தான். கூறவரும் பொருளை சிறப்பாகவும், எளிதாக புரியும்படி உரைப்பதை சிறந்த இலக்கியம் எனலாம். அந்த வகையில் சங்க இலக்கியம் சீரிய சிந்தனைகளின் பிறப்பிடமாகவும், பண்பாட்டின் புகலிடமாகவும் உள்ளன. சங்க இலக்கியங்களில் காணப்படும் அறங்கள், சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சியின் படிநிலை எனலாம். அந்த வகையில் சங்க இலக்கிய இலக்கியங்களில் காணலாகும் அறங்களில் சிறந்த விருந்தோம்பல் குறித்து இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

## அறம்

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்களை வெளிப்படுத்துகின்ற நூல்களே பேரிலக்கியங்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், நான்கு உறுதி

பொருள்களுள் வைப்பு முறையில் முதலாவது அறியப்படுவது அறம் மனித வாழ்க்கையின் உயிர் அறம். அந்த அறமின்றி வாழ்வது வாழ்க்கையாகது. தனி மனித வாழ்க்கை முறை ஆயினும், ஒட்டுமொத்த மனித சமூகத்தின் வாழ்க்கை முறையாயினும் அந்த வாழ்க்கைமுறையை பட்டை தீட்டும் கூர்வாளாக அறமே இயங்குகிறது. பண்டைய காலத்தில் அரசியல் மாற்றத்தினால் மக்களிடம் ஏற்பட்ட குழப்ப சீர்கேட்டினால் அவர்களிடம் இருந்த அறம் மாறி அதர்மம் வளர்ந்து அவர்களை அழிவு பாதைக்கு நேராக கூட்டிச் சென்றது. அந்த நேரத்தில் மனித சமூகத்தை சீராக்கும் நோக்கில் அறம் என்ற ஒன்றை நோக்கமாகக் கொண்டு பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின. காரணம் அறம் மனித வாழ்க்கையிலிருந்து விடுபடும்போது அல்லது மனிதன் அறத்திலிருந்து விலகும் போது பாதிப்பு ஏற்படுவது தனிமனிதன் மட்டுமல்ல. ஒட்டுமொத்த மனித குலமே அழிவை சந்திக்கின்றது. அறத்திலிருந்து மனிதன் விடுபடும்போது அந்த அறமே அவனுக்கு எமனாக வரும் என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்” என்று குறிப்பிடுகின்றார்.

இல்லறம், துறவறம் இந்த இரண்டும் அறம் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தமிழ் மக்கள் அக வாழ்வாயினும், புற வாழ்வாயினும் அவர்களுடைய வாழ்வில் அறமே பிரதானமாக போற்றப்படுகிறது. ‘அறம்’ என்ற சொல்லுக்கு இலக்கியங்களில் எண்ணில்லா பொருட்கள் சுட்டப்பட்டுள்ளன. ‘மனதளவில் மனிதன் குற்றமில்லாதவன் ஆக இருக்க வேண்டும்’ என்று இரத்தினச் சுருக்கமாக குறிப்பிடுகின்றது திருக்குறள்.

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்து அறன்

ஆகுல நீர் பிற (குறள் 34)

என்னும் குறளினால் அறியலாம.; இதன் அடுத்தபடியாக,

அறமெனப் படுவதுயாது எனக் கேட்பின்

மறவாது இது கேள் மன்னுயிர்க்கெல்லாம்

உண்டியும் உடையும், உரையுளும் அல்லது

கண்டது இல்

(ஆபுத்திரனோடுமணிபல்லவம் அடைந்த காதை 228 -230)

என்று மணிமேகலை மிக எளிமையாக அதே சமயம் ஓர் மனித உயிருக்குத் தேவையான அடிப்படையை வாய்க்கச் செய்வதே அறம் என்றுச் சுட்டுகிறது.

அறம் என்ற சொல்லிற்கு நல்வினை, ஐயம், ஏழைக்கு வழங்குதல், நோயாளிக்கு அருகப்படும் மருந்தீகை, நலமானது, இன்பம், தகுதியானது, கற்பு, நோன்பு, அறப்பயன், சமயம் ஓதி, அறச்சாலை, அறத்தெய்வம், நடுநிலையறம் பேணும் கூற்றுவன் என்று பல பொருளை பேரகரமுதலி தருகின்றது.

அறம் என்ற சொல் பலவகைகளால் பல நிலைகளில் ஆழ்ந்த நுண்ணறிவு பொருளுடன் வரையறை செய்ய இயலாத வகையில் அதைத்தேடுதல் என்பது சிவபெருமானின் அடி முடியை தேடுதலுக்கு சமமாகும். மனித ஒழுக்க முறைகளில் அவனுடைய நற்செயல்களால் சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மையே அறம் என்ற பொருள் கொள்ளலாம்.

## அறச்சிந்தனைகள்

தனிமனிதன் சார்ந்த அனைத்து நிகழ்வுகளிலும் அறம் ஊடாடுவதைச் சங்க இலக்கியச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. சொல், செயல் இவை அனைத்திலும் அறம் போற்றப்பட்டுவந்துள்ளமையை இவ்விவிலக்கியங்கள் வாயிலாகவும் அறிய இயலும். தனி மனிதன் பிறருடன் தொடர்பு கொள்ள துணை செய்கின்ற பொது இயல்பான ஒழுக்கம் அறம் எனப்பட்டது. (கு.வெ.பாலசுப்பிரமணியன்; சங்க இலக்கிய கலையும் கலைக் கோட்பாடும் 1998, பக்கம். 527). வாழ்வியல் அறங்களாகச் சுற்றம் பேணல், நல்லொழுக்கம், விருந்து உபசரித்தல், ஈகை, பொறையுடமை என்பன இயல்பாக நடைபெறவேண்டியவையாகும் என்ஆகும் என்பர். திருவள்ளுவரின்,

அறத்தான் வருவதே இன்பம் மற்ற எல்லாம்

புறத்துப் புகழும் இல (குறள் :39)

என்னும் கருத்தும் குறிப்பிடத்தக்கதாகும். இலக்கியங்கள் மனித வாழ்க்கையோடும் வாழ்க்கை வரலாற்றுச் சூழலோடும் தொடர்புடையன என்பதை மணிமேகலை ‘மண்ணுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல்’(வேங்கடசாமி நாட்டார், மணிமேகலை, 1992 வரி 229 -230)

என்பதாலும் தெளியலாம். எனவே, வாழ்வியல் பற்றி கூறுகின்ற இலக்கியப் படைப்பின் நற்செயல்கள் அனைத்தும் அற வழிக்கு உட்பட்டதை அறிந்து கொள்ள முடிகிறது.

## விருந்தோம்பல்

சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் என்பது வெறும் உணவு அளிக்கும் செயலாக மட்டுமன்றி, ஒரு வாழ்வியல் அறமாகவே போற்றப்பட்டது. "விருந்து" என்ற சொல்லுக்கு "புதுமை" என்று பொருள். அதாவது, முன்பின் தெரியாத புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதே உண்மையான விருந்தோம்பலாகக் கருதப்பட்டது.விருந்தினர்களை வரவேற்றலும் போற்றுதலும் தொன்மைக் காலம் முதலே தமிழ் சமுதாயத்தில் போற்றி பாதுகாக்கப் பெற்ற பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகும.; அழகிய இல்லங்களை உடைய சிற்றூரில் வெண் மணல் மிகுந்த வீட்டு முற்றத்தில் அளவில்லாத பண்டங்களை வைத்துக்கொண்டு வாழ்கின்ற மக்கள் வந்த விருந்தினருக்கு விருந்தோம்பல் செய்வதைக் கதப்பிள்ளையார் பாடலில்,

-------------- மணல் மலி முன்றில்

வரையாத் தாரம் வருவிருந்து அயரும்

தன்குடி வாழ்நர் அம்குடிந் சீறூர் (நற்.135:2-4)

எனவும் பகற்பொழுதில் செல்வச் செழிப்புள்ள வீடுகளுக்கு வரும் விருந்தினரை ஓம்புதல் நெய்தல் மக்களின் வழக்கம் என்பது,

------------------------ கல்காய் ஞாயிற்றுத்

திருவுடை வியன்நகர் வருவிருந்து அயர்வர்; (நற்:258 :3-4)

செல்விருந்து ஓம்பி வருவிருந்து நோக்கல் தமிழ் மக்களின் தலையாய பண்பாடு என திருவள்ளுவர் விருந்தோம்பல் அதிகாரம் மூலம் தெளிவபடுத்தியுள்ளார். நீவிர் எம் சிற்றூருக்கு வந்தால் எங்கள் வீட்டினர் அன்புடன் எதிர்கொண்டு அழைத்து, நீயும் உன் ஏவலாளரும,; குதிரையும் இன்பம் அடைய நல்விருந்தினைப் பேணுவோம் எனும் உழவுச்சனார் பாடலில்,

இளையரும் புரவியும் இன்புற நீயும்

இல் உறை நல் விருந்து அயர்தல்

ஒல்லுதலும் (அகம்.300:20-22)

என்றார். விருந்தினை உண்டு மகிழ்ந்து, தங்கி செல்வதாக அமைந்த செய்தியை,

-------------------- அசைவு மிக உடையோன்

மெல் இலைப்பரப்பின் விருந்து உண்டு யானும் இக்

கல்லென் சிறுகுடித் தங்கின் (அகம்.110:11-12)

எனும் போந்தலைப் பசலையார் பாடல் தருகின்றது. குடும்பத்தினரால் போற்றப்பட்ட விருந்தோம்பல் பண்பு பலரால் பின்பற்றப்படும்போது சமுதாய அறத்தின் மதிப்பு மிகுந்து தகுதியைப் பெறுகின்றது எனலாம். விருந்தினர்களை வரவேற்றலும் போற்றுதலும் தொன்மைக் காலம் முதலே தமிழ்ச் சமுதாயத்தில் போற்றி பாதுகாக்கப் பெற்ற பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகும்.

## விருந்தினரை வரவேற்கும் முறை

விருந்தினரை உபசரிப்பதில் தமிழர்கள் காட்டிய நுணுக்கமான நெறிகள் வியக்கத்தக்கவை. விருந்தினரை முகம் சுளிக்காமல் வரவேற்க வேண்டும் என்பதற்குத் திருவள்ளுவர் அனிச்சம் மலரை உவமையாகக் கூறுகிறார். அனிச்சம் மலரை முகர்ந்து பார்த்தாலே அது வாடிவிடும்; அதுபோல விருந்தினரை நோக்கும்போது நம் முகம் சற்றே மாறினாலும் அவர்கள் மனம் வாடிவிடும்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குநழ்யும் விருந்து. (குறள்:90)

எனும் குறளின் மூலம் விருந்தினரை நாம் எந்தளவு உபசரிக்க வேண்டும் என்கின்ற விருந்தோம்பல் அறத்தை அறிந்துக் கொள்ளமுடிகின்றது. மேலும், வீட்டிற்கு வந்த விருந்தினர் விடைபெற்றுச் செல்லும்போது, அவர்களை வழியனுப்பப் பிரிந்து செல்ல மனமில்லாமல், அவர்கள்

ஏறிச்செல்லும் தேர் வரை "ஏழடி நடந்து சென்று" (காலின் ஏழடிப் பின்சென்று) வழியனுப்புவது சங்க கால வழக்கம்.

---------------------நெடுந்தேர்

ஊட்டு உளை துயல்வர, ஓரி நுடங்கப்

பால் புரை புரவி நால்கு உடன் பூட்டிக்

காலின் ஏழ் அடிப் பின் சென்று கோலின் (பொரு.165)

என்னும் பாடிலின் வரிகள் மூலம் கரிகால் சோழனின் கொடைத்தன்மையும், தமிழர் விருந்தோம்பல் பண்பையும் காணலாம்.

## வறுமையிலும் விருந்தோம்பல்

தனக்கே உணவில்லாத இக்கட்டான சூழலிலும் விருந்தினரை உபசரித்த நிகழ்வுகள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

## வாளை அடகு வைத்தல்

வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு உணவளிக்க வழியில்லாத வறிய நிலையிலும், தன் வீரத்தின் அடையாளமான பழைய வாளைக் கொடுத்து உணவு பெற்று உபசரித்த செய்தியை

“..பழைய வாள் கொடுத்து இன்றும் விருந்து எதிர் கொண்டனன்..."

(புறம்:316)

முதல் நாள் வந்த விருந்தினரை உபசரிக்கத் தன் பழைய வாளை அடகு வைத்தான். மறுநாளும் விருந்தினர் வர, என்ன செய்வது என்று யோசித்தபோது, தன் யாழைஅடகு வைத்து உபசரித்தான் என புறநானூறு மூலம் அறிந்துக்கொள்ள முடிகின்றது.

## விதை நெல்லைச் சமைத்தல்

விருந்தினருக்கு உணவிட தானியம் ஏதுமற்ற நிலையில், மறுநாள் விதைப்பதற்காக வைத்திருந்த விதை நெல்லினை உரலில் இட்டுக் குத்தி உணவாக்கித் தந்த ஒரு வீரத் தாயின் மாண்பை இப்பாடல் பேசுகிறது.

“விதைக்கு வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தி..." (புறம்:333)

என்னும் பாடலில் இல்லத்தில் உண்பதற்குத் தானியம் தீர்ந்துவிட்ட நிலையில், வேறு வழியின்றி விதைக்காகச் சேமித்து வைத்திருந்த தினையையே விருந்தினருக்காகச் சமைத்துத் தந்து பசி போக்கினர் என்பதை தெளிவுபடுத்துகிறது. மேலும், சிறுபாணாற்றுப்படையில் வீட்டில் பசு இல்லாவிட்டாலும், விருந்தினர் வந்தால் எப்படியாவது அவர்களுக்குப் பால் கலந்த உணவை வழங்குவதற்காக அண்டை வீட்டாரிடம் கடனாகப் பெற்றாவது உபசரிப்பார்கள் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

## இரவு நேர விருந்தோம்பல்

இரவில் கதவை அடைக்கும் முன் விருந்தினரைத் தேடும் வழக்கம் தமிழர்களிடம் இருந்தது. உணவை முடித்துவிட்டுத் தூங்கச் செல்லும் முன், "யாராவது பசியுடன் வெளியே இருக்கிறீர்களா?" என்று வினவி, அதன் பின்பே கதவை அடைத்தனர். என்பதை

“பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ” (நற்:பாடல்-142)

நள்ளிரவில் கூட விருந்தினர்கள்; வந்தாலும், மகளிர் தங்களின் தூக்கத்தைப் பொருட்படுத்தாமல் இன்முகத்துடன் வரவேற்று உணவிட்டனர் என்பதை இப்பாடல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

## முடிவுரை

“விருந்தே புதுமை" என்று வாழ்ந்த சங்கத் தமிழர்கள், தமக்காக வாழ்வதை விடப் பிறருக்காக வாழ்வதையே பெருமையாகக் கருதினர். நீண்ட ஆயுளைத் தரும் நெல்லிக்கனியை, தான் உண்ணாது ஔவையாருக்கு அதியமான் கொடுத்ததும் விருந்தோம்பலின் அடிநாதம் தான். ஆனால் இன்றைய

இயந்திரத்தனமான உலகில், சங்க காலத்தில் இருந்தது போன்ற அந்த உன்னத விருந்தோம்பல் பண்பு இன்று நம்மிடையே இல்லை என்பதே நிதர்சனமான உண்மை. ஆயினும் நம் முன்னோர் போன்று நாமும் அந்த தலையாய விருந்தோம்பல் அறத்தினைப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

## References


Avvai Duraisamy Pillai, Su., (1947) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Akananuru, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Varadharasan, Mu., (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License